ஓம்.

ஷண்முகாயநம:

மாட்சிமை வாய்ந்த

சிவகங்கை

# மகாராஜா துரைச்சிங்கம் அவர்கள்

# மகிமைத்திலகம்.

BY

K. வீரபத்திரன் பாடியது.

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர் 1923. காப்பிரைட்

ஓம்.

ஷண்முகாயநம:

மாட்சிமை வாய்ந்த

சிவகங்கை

# மகாராஜா துரைச்சிங்கம் அவர்கள்

# மகிமைத்திலகம்.

BY

K. வீரபத்திரன் பாடியது.

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டர் 1923. காப்பிரைட்.

ஸ்ரீமான் கன்னிச் ஜமீன் சரபம் உடுமலை
மகா-ா-ா-ஸ்ரீ முத்துசாமிக்கவிராயரவர்களால்
இயற்றிய

# ஆசிரியம்.

தாணிநுதி தசாவ தாரப் பாஞ்ச
சன்னியவிநோத நெடுமால்
சலசசர ணந்தனிலு மவன்மருக னைசிவ
சந்தான சுப்ரமண்யன்
வரமுதவு பதகமல மலர்மீது மன்புபெறு
வழியடியர் பஜனை புரிய
வார்த்தநெல் லமுதமென கீர்த்தனம் பலபாடி
மங்காத தங்ககீர்த்தி
பரவநின் றுன்செழும் பாலாழி நகர்மேவு
பஞ்சகீர்த் தியரஞ்சிதன்
பலநாடகப் புகழ்கொள் பெருமாள் விவேகன்
பசுந்தமிழை மெச்சியச்சுப்
பிரபலஞ் செய்தவரும் வருமான மிகுசீர்
பெறும்படி வழங்கு மென்றே
பேணியுடு மலையனும் பேசுமெனில் யாவரே
பேசாரிதன் பெருமையே.

—:0:—

உ

## அவையடக்கம் சந்தவிருத்தம்.

இலக்கண மிலக்கிய பழக்கமு வழுஉக்கழி
னிழுக்குக மொழுக்க மறியேன்
இயற்றமி ழிசைத்தமிழ் நடைத்தமி ழெனப்பக
ரியற்கைகள் செயற்கை யறியேன்
இருக்கெசுர் சமற்பதர் வணப்பிர ணவஸ்ருதி
யெடுத்தவை படித்து மறியேன்
இனிப்புறு தமிட்குரு கிர்பைக்கடல் குகப்பொரு
ளிருப்பக நினைத்து மறியேன்
நலக்குண தமிட்புல வரைக்கரு தியுற்றவர்
நவிற்பொருள் செவிக்கு ளறியேன்
நரைத்தவர் பழக்கமு மெனக்கிலை முறைப்படி
நடக்கைகள் வழக்க மறியேன்
நதிச்சுனை குளித்தருள் தவப்பல னடுத்தவை
நடத்திய விடத்தை யறியேன்
நவக்ரகம் வகித்துள தலத்தினி லுருத்தகை
நமஸ்கென துதித்து மறியேன்
துலக்குள சிவஸ்தல மரிஸ்தல மகத்துவ
துணிக்கைகள் விதத்தை யறியேன்
சுகப்படு விதஸ்துதி மனச்சுய பகுத்தர்கள்
துணைப்ரிதி யெனக்கு ளறியேன்
துகைப்படு கணக்குக ளெழுத்துகள் படிப்பவை
துமித்துளி மனத்தி லறியேன்
சுரப்படி படிப்பவ ரிடத்தினி லடுத்தவர்
சுகத்தொனி யகத்து ளறியேன்
மலைக்குரு முனித்தமி ழிலக்கண மிலக்கிய
மனத்தெளி வுளப்பு லவர்வாழ்
மகத்துவ ஜெகத்தினில் மிகத்துணிவு முற்றொரு
மனத்துட னணுக்கி னையிலான்
மனத்தினி லுதித்ததை யுரைத்தன னிதிற்பிழை
மனித்தும தலைச்சொ லெனவே
மதித்திட வுயிப்புவி தனிற்கவிஞர் நற்றிரு
மலர்ப்பத மதைத் தொழுகுவாம்.



கனம் பிரைவேட் சிக்ரேட்டேரி
பிலிப்ஸ் துரையவர்கள்.

# முகவுரை.

அன்பு அறிவு ஆன்ற ஐயன்மீர்! முகவுரை என்னுஞ் சொற்றொடரானது எந்நூலிற் பிரதிபலிக்கின்றதோ அவை அந்நூலின் சார சங்கிரகத்தைக் கரதலாமலகம்போற் காட்டத்தக்கதென்பதை நண்பர்கள் நன்குணர்ந்த தென்பது பற்றியே மாட்சிமைவாய்ந்த மகாராஜா துரைச்சிங்கம் அவர்களின் மகிமைப்பிரபந்த" மென்னு மித்தூய தனித் தமிழ்த்திலகத்திற்கும் ஓர் முகவுரை வரையவேண்டியது எனது கடன்மைப் பாட்டில் மிகவுஞ் சிறந்த தொன்றாயிற்று.

என்னேயோ. வெனிங்

இங்கிலவுலகுக்கோர் திலகமாயும் ஜென்மசாபல்ய மளிக்குந் திருத்தலமாயும் விளங்குஞ் சிறந்த இச்சிவகங்கைபம்பதியின் கண்ணே "திருவுடைமன்னரைக் காணிற்றிருமாலைக் கண்டேனே" என்னுந் தெய்வீகவாக்கியமென்பது உத்தேசமொரு இருபது ஆண்டுகட்கு முன்னிருந்தே தோனிக்காது மனுநெறி வழாதியற்று மன்னனில்லையே என்றேங் இப்பெரிதும் மனந்தளர்ந்துற்ற இந்நகர்வாசிகளினிடையருக் குறையைப் பரிகரிப்பான் வேண்டித் திருவுளங்கனிந்த சிவபெருமான் றந் திருவருட்பாங்கால் முன்னரே அரசலட்சணங்கள் தவழச் சிருட்டிக்கப்பட்டுள்ள காருண்ய துரைச்சிங்கப் பெருமானை அரசதர்மங்களாள ஆதிலொரு கடமை.

பெறுதல், ஆலயகிர்த்தியங்களை அறுபோதுந் தவறாதியற்று தல், அறநெறிகாத்தல், அதிதிகள் அந்தணர் முதலியோரைச் சம்ரக்ஷித்தல், தன்னுயிரென்றே மன்னுயிரோம்புதல், தாய்ப்பாஷையாந் தமிழைவளர்த்தல்,புலவர்கட்டம்மனம் பொருந்தச் செய்தல்,பழிபகைவோர் துறைபுக்கி ரொறுத்தல்;சுற்றந் தழுவல், குற்றந் தவிர்த்தல் என்னு மனுநீதி முறைமை வளர்ந்தோங்கும் படிக்கும் அவற்றால் நகர்வளஞ் செழித்து நாடோறும் பிரஜைகள் நன்றிகுன்றாராய் நாற்றிசையினும் புகழ்மகிழ்ந் திலங்கும்படிக்கும் தம்பிரதி நிதியாக நியமித்து ஆங்காங்கு சதுர்வித புருஷார்த்தங்க ளென்னுந் தர்மார்த்த காமமோட்சங்கள் துலங்கும்படிக்கும் ஆக்ஞாபித்து நம்மரச பெருமானுக்குச் சிறிது காலத்திற்கு முன் செங்கோலையும் சிரமிசை மணிமுடியையும் சூட்டியதற்கிணங்க அம்மன்னர் பிரானும் பணிவோடு அவற்றைப்பின் பற்றி யொழுகும் பேராற்றலைக் கண்ணுற்றுக் களித்த இலங்கா மாந்தர்களின் றன்மையை அனவரதமுங்கண்டு கேட்டுய்த்துணர்ந்த என்னிருதயத்துள் ளேதோ ஓர் தெய்வீகசக்தி புகுந்து அடிக்கடி ஆவலதிகரிக்கச்செய்து வந்தமைபற்றி இங்ஙன மென்சிற்றறிவிற்கெட்டியமட்டு மிம் மங்களப்பிரபந்தமெனுந்தூயதனித் தமிழ்த் திலகத்தை யொருவாறு வனைந்து என்மனமொழி மெய் புளகாங்கிதமுற மாண்பமைந்த மகாராஜா துரைச் சிங்கம் அவர்களின் சமுகத்திற் சமர்ப்பித்தனன்.

இவற்றிற் புலப்படுங் குறைகளைக் கண்ணுறுந் தமிழபிமானச் செல்வர்கள் பெரிதுங் கருணைகூர்ந்து அவை எனது பிரதமத் துவக்கத்தின் வழுக்களென மனத்திலிருத்திச் சீர் திருத்தி ஒப்புயர்வற்ற தமிழின்பாற்பூண்டுள்ள அன்பினை

சதத்தை மேன்மேலும் பூர்த்திசெய்ய வல்ல ஊக்கத்தை யளிப்பார்களென்ற முழுநம்பிக்கையோடும் அன்னோரைப் பன்முறையும் பணிகின்றேன்.

பின்னுமிந்நூலிற்குச் சதாவுடனிருந்துதவிச் சாற்றுப் பாக்களுந்தந்த அரசவிஸ்வாசிகளாமென் சகோதர அறிவாளர்கட்கு மெஞ்ஞான்றும் யான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேனாக.

இங்ஙனம்.

K. வீரபத்திரன்,

சிவகங்கை.

# சாற்றுப்பாக்கள்.

---

சிவகங்கை ராஜாஹைஸ்கூலிற் பிரதம தமிழ்ப்
பண்டிதராயிருந்த மகா-௱-௱-ஸ்ரீ M. P. கணபதியாபிள்ளை
அவர்கள் கனிஷ்டர்

## முத்துக்கருப்பபிள்ளை யவர்களியற்றியது.

வெண்பா.

பூமாது நாளும் பொருந்தும் புயல்வண்ணச்
சீமான் துரைச்சிங்க செம்மலின்மேற்—பாமாது
நத்தப் புலவர் நயமீ தெனவீர
பத்திரன்சொற் றனிவிசைப் பா.

---

சிவகங்கை சமஸ்தானம் ராஜவஸ்தாதாகிய
மகா-௱-௱-ஸ்ரீ சமையணவஸ்தாதவர்கள் தௌத்திரரும்
சுப்பிரமண்யவஸ்தாதவர்கள் புத்திரருமான மகா-௱-௱-ஸ்ரீ

## S. S. மாணிக்க வஸ்தாதவர்களியற்றியது.

வெண்பா.

சித்தமகிழ் வோடுதுரைச் சிங்கமன்னன் மேல்வீர
பத்திரனு ரைத்திட்ட பாமாலை—யைத்தெரியத்
தம்பிமுக லங்கேட்டுத் தொந்திருலுவங் கோடிவந்தார்
தம்பியதைக் கண்டுவியந் தார்.

---

ஓம்.

காப்பு.

## கணேசர் துதி.

வெண்பா.

துங்கமிகுந் தோங்குந் துரைச்சிங்க பூபதிமேற்
சங்கத் தமிழ்மாலை சாற்றுதற்கு—மங்களஞ்சேர்
தம்பிக்கு முன்னாட் டகுமுதனி யேபுரிந்த
தும்பிக்கை யோனே துணை.

(சாமபஜனகோரியா என்ற மெட்டு.)

இராகம், இந்துஸ்தான்தோடி. தாளம், ஆதி.

பல்லவி.

மூலமந்திரப்பொருளே முன்வந்தருளே (மூல)

அனுபல்லவி.

கோலவல்லபைலோலா குறையகற்றுஞ்சுசீலா
பாலர்கட்கனுகூலா பாவகிர்மூலா (மூல)

சரணங்கள்.

ஆருவாரணபோகா அகிலபுவனபோகா
ஏகதந்தவிவேகா இன்பத்தியாகா (மூல)

பாசாங்குசவைபவா பரமசுகானுபவா
நாசப்ரலணதேவா சந்ததங்காவா (மூல)

பரமணக்கமழ்வீரா பத்ரன்பணியுதாரா
சோமசேகரன்குமாரா தூயசிங்காரா (மூல)

## சிவகங்கை மகாராஜா துரைச்சிங்கம் அவர்கள்

### சுப்ரமண்ணியர் துதி.

வெண்பா.

குஞ்சரியைக் கொஞ்சுங் குமரா குருபரனே
விஞ்சகிரி யைப்பிளந்த வேலவனே—புஞ்சரணம்
போற்றுந் துரைச்சிங்க பூபதிமேற் பாமாலை
சாற்றும் பெருமையினைத் தா.

(பாலாபிஷேகப்பழனிமலை என்றமெட்டு.)

பல்லவி.

வேலுமயிலுந் துலங்கும்படி வந்தென்
விண்ணப்பங் கேட்டருள் ஷண்முகனே
வேதனக் காருணைப் போலினிச் சொல்லுனை
வித்வ கலாநிதிப் ஷண்முகனே. (வே

பாலும் பழமுந் ததும்பும்பஞ் சாமிர்தப்
பாற்காவடிச் செல்வப் பாக்கியனே
பாவவி மோசனச் சேத்ர மெனுந்தென்
பரங்கிரி தங்குஞ் சிலாக்கியனே. (வே

தொகையறா.

பாரிலுன் றனையே நம்பிப்பற்றினேன் கிருபைசெய்வாய்
நேரிடும் இடரகற்றி நிம்மதிதந்தே உய்ப்பாய்

பாட்டுத்தொடர்.

நிகழ்கலி யுகவர தாகதிர் க்ஷமா
நிதிமதி தருமறு முகசுக நாமா
நித்யந்துதிக்குங்கே வீரபத்ரன்பதந்
தித்திக்கு மெத்திக்குந் தீஞ்சுவையே. (வே)

## சரஸ்வதி துதி.

### வெண்பா.

பூரணியே சங்கப் புலவருள மேபொருந்துங்
காரணியே ஞானக் கலைவதியே—தாரணியோர்
போற்றுந் துரைச்சிங்க பூபதிமேற் சங்கீதஞ்
சாற்றுந் தகைமையினைத் தா.

(தாயாக வந்தவுன்னை என்றமெட்டு.)

இராகம், செஞ்சுருட்டி. தாளம், ஆதி.

### கண்ணிகள்.

(1) வெள்ளைக்கலையிலங்கும் வெள்ளைப்பணிதுலங்கும்
வெள்ளைக்கமலவதியே—பண்பார்க்குரிய
சள்ளை தவிர்க்கும் நிதியே.

(2) பண்பார்ந்திடுங்கருணைக் கண்பார்தருந்தருணம்
அன்பார்ந்திடுஞ்சம்பனியே—அயன்மனதிற்
கின்பார்ந்திடும் வதனியே.

(3) தாயேகல்யாணியருள் வாயேமுத்தமிழ்தரு
வாயேதேவிபாரதியே—வீரபதரனுன்
சேயேகிருபைபதியே.

(காக்ஷி கண்காக்ஷியே என்ற மெட்டு.)

இராகம், தேசிகம். தாளம், ரூபகம்.

### பல்லவி.

ஜென்மசாபல்யமே சித்திக்குங்கைவல்யமே (ஜெ)

அனுபல்லவி.

கன்மமகற்றுஞ்சிவ கங்கையின்பிரபல்யமே (ஜெ)

சரணங்கள்.

தன்மசொரூபசுகத் தன்மைக்கோர் திவ்யஸ்தலம்
சாலோகசாமீபசா ரூபசாயுச்யநலம்
நன்மைக்கிதோர்வித்தெனவே நம்புவோர்க்குப்பலம்
நாதசின்மயப்ரபோத சாதனப்பூஜாபலம்

நியாயந்தரும்புந் தகுந்தமாகூஷி—மனத்
தூயதுரைச்சிங்கனாசாகூஷி—மிகு
நேயந்திமிர்ந்தோங்குமனச்சாகூஷி—யெந்தத்
தேயமும்நிகரில்லை கண்காகூஷி

சேவிக்கிற் சிலாக்யம்
பூவிற்குள்ளை போக்யம்
பாவிக்கிற் சௌபாக்யம்
கே. வி. யார் நல்வாக்யம். (ஜெ)

(மருவப் பருவமுள்ள மகராசி என்ற மெட்டு.)

பல்லவி.

சிவகங்கை க்ஷேத்திரலங்கமம் (சி)

அடி தொடர்.

(1) ஜென்மபாவமறும் நன்மையாவுமுறும் (சி)
(2) ஜெகத்தில் வருத்த மகத்வ மிகுத்த (சி)
(3) சித்திக்குந்திருவருட்டுணை எத்திக்குமில்லையதற்கிணை (சி)
(4) சீர்தகுந்த வூர்சுகந்த பாருகந்த பேர்மிகுந்த (சி)
(5) திருமகளும்வாணிமகளும் மறைமகளுமுறைதலம் (சி)

அநுபல்லவி.

தெரிசனையாற் பலித்திடுஞ் சுகபாக்யம்
ஜெயசுபசோபன சுகிர்த சிலாக்யம்
தருமுயர்பதவி சந்தான வைபோக்யம்
தத்துவப்ராசாதஞான நித்தியப்ர போதமான (சி)

சரணம்.

துரைச்சிங்கபூபதி துரைத்தனப்பீடம்
சுருகைனர்துதி நதியின் விசேடம்
திருச்சங்கமகிமை திமிர்ந்த கபாடம்
சித்தமொத்திலங்கும்வீர பத்திரன்பதந்துலங்கும். (சி)

---

(நீரார்கடலிலங்கை என்றமெட்டு.)
இராகம், செஞ்சுருட்டி. தாளம், ஆதி.

கண்ணிகள்.

(1) முத்துவிஜய ரெகுநாத கௌரிவல்லவ
முத்தமிழ் வித்வசங்கமே—தத்துவபோத
வித்தகத்துரைச்சிங்கமே—உயர்
பூத்நியைத்தரும கத்துவப்பெருமை
நித்தியப்பொருளினைத்தருமருமை
சத்தியானு சாரதுங்கமே—சுத்திகரித்த
பத்தரை மாற்றுத்தங்கமே (மு)

(2) ராஜராஜேஸ்வரியின் தாசானுதாசனெனத்
தேஜசிலங்குந்திருவே—சிவகங்கைக்கோர்
பூஜிதமான வுருவே—தமை

நாடிடுங்கவிஞர் பாடிடுஞ்சுவையி
னீடிடுங்கருணை சூடிடுங்குமண
வாசங்கமழுந் தருவே—சன்மானத்திலதி
சேடந்தவழுங் குருவே. (முத்)

(3) திண்டார்புயத்திற்கிணை யுண்டோவெனப்புவியிற்
கொண்டாடுந் தேகசௌந்யமே—பாரதகண்டம்
பண்டேசெய்திட்ட புண்யமே—அட்ட
திக்கெலாம்புகழு மிக்கமேன்மையுளன்
தக்கசாதுரிய மொக்கும்பான்மையுளன்
கண்டால்தோறும் லாவண்யமே—யென்றென்றும்பய
னுண்டாஞ் சிவகாருண்யமே (முத்)

(4) தேவாமிர்தத்தைநிகர் கே. வீரபத்ரன்பகர்
பாவின்வைபோகபாக்யமே—கனகமலர்
தூவும்விவேகபோக்யமே—தன
சேகரப்பிரபு மகிபொற்புடைம
ஞேகரப்பிரபு வாகனந்திரிகை
மேவும்விசேட போக்யமே—யமைந்ததிருச்
சேவைதருஞ் சிலாக்யமே (முத்)

(சல்லாபக்காலட்சேபமே என்ற மெட்டு)

பல்லவி

சத்காத்வைதப் ரசங்கமே துரைச்சிங்கமே (சத்)

அநுபல்லவி

சத்காரியசதுர்மறை நிலைதனையுணர்
முத்துவிஜயரெகுநாதா—கௌரிவல்லப (சத்)

சரணங்கள்.

சித்தாதியோர்புகழ் குணநிதி
தெய்வீக மகிமையினதிபதி
வித்யாபி விர்த்தியி லுறமதி
மெய்ஞ்ஞான பீடமெனும்பதி (சத்)

காருண்யசீல மிகுஞ்சிவ
கங்கைக் கோர்கன்ன னெனப்பெயர்
சேரும்ப்ர போதய சம்ப்ரம
திவ்யாவதார னெனுமுயர் (சத்)

பஞ்சாமிர்தச் சுவைசேர்பதம்
பாடுங்கே. வீரா ஈனுதினம்
நெஞ்சாற் றுதி யேபுரிவிற்பன
நேர்மைக்குவமான சுமுகமெனும் (சத்)

---

(அருட்கடல் ஞானந்தந்தது என்ற மெட்டு.)

அரைச்சிங்கநாமன் செங்கோல்விசேடமே
—வித்யாபிவிர்த்தி
தோன்றும் எஞ்ஞான்றும்பொற்பீடமே (து)

(1.) திருச்சங்கசேகரன் திவ்யமனோகரன்
தெய்வீக சக்தியோன் தயாகரன்
கன்ய சிங்காசம்பவன் சீர்சே எருத்தவன்
ஸ்ரீமா னெங்கோமானகற் சேமாதிபன்
ஜெகமதிற் புகழ்மிகுந் தலைமையாதிபன்
சின்மயத்தியானசீலன் நன்மைமிற்ப்ரதான மூலன் (து)

(2) அஞ்ஞானமோட்டுவோன் மெய்ஞ்ஞான மூட்டுவோன்
அபயப்ரபோதகம்பும் நாட்டுவோன்—அன்பர்க்
காதராபூதனே நீதாவினோதனே
ஆனந்தமேவுஞ் சதானந்தனே
அற்புதப் பொற்பமை யுற்பவ
அரிய பெரிய கிரியையன் (துரை)

(3) கமழும்பிர சங்கனே காருண்யதுங்கனே
கானத்தி யிர்ந்திலங்கும் புங்கனே
சிவ கங்கைப் ரபல்யனே
கருணைக்கை வல்யனே
கன்னுசம் பன்னுவிற் பன்னு சகா
கசடற மொழிதலே நலமெனக்
கருதிடுங்கே வீரபத்திரன்
நருபதந்த தம்பு சித்ரன் (துரை)

(ஜெகத்தினிலிவள் முகத்தின் என்ற மெட்டு)

இராகம் செஞ்சுருட்டி. தாளம் ஆதி.

கண்ணிகள்.

(1) மகிதலத்தினிற் புகழ்மிகுந்தவனே
—வித்யாபிவிர்த்தி
வளரொழி விருதய மகத்துவனே—உயர்
வாகனன்பர்தி யாகனின்பனைவ யோகசம்ப்ரம
பூஜசம்பவ

(2) விகசிதத் திருநகை முகத்தவனே
—சத்யானுசார
விதிவழி யினையுணர் சுகத்தவனே—மறை
வேதியர்க்கித மோதுமற்புத போதசொற்பிர
பூரத வுத்தம

(3) துரைச்சிங்கமெனு முயரிய நாமன்
—கௌரி வல்லவ
தோன்றலின் வழியாய் வந்தநேமன்—குண
துங்கநற்சிவ கங்கையிற்சுபமங்களப்பிர
சங்கவிற்பன

(4) கவிச்சிங்க மெனப்புலவர் கட்குகந்தோன்
—தொல்காப்பிய பிலக்
கணமுதற்பல கணிதங்களுணர்ந்தோன்—உப
காரசித்தத யாளமித்திரன் வீரபத்திர கீதசித்திரன் (மகி)

(ஷண்முகானந்த சபா என்ற மெட்டு.)

பல்லவி.

திருவளர்மார்பன் துரைச்சிங்க வைபோகன் (திரு)

அநுபல்லவி.

சிங்கவை போகன் தமிழ்ச் சங்கவிவேகன் (திரு)

சரணங்கள்.

தருவளரும் பூபாலன் சார்ந்த ஜனானு கூலன்
தாரணிபோற்றும்பிர தாபசம்பவ சீலன் (திரு)

கன்றுவ தரான்சிவ கங்கைநகர்க் காதரன்
கானவி னோதகுண கன்யவிஸ்தார தீரன் (திரு)

சமரசப்பான்மை புள்ளான் சைவசித்தாந்த முள்ளான்
சாற்றுங்கே வீரபத்ரன் போற்றும் விசேட முள்ளான் ()

—∘∘—

இராகம் அமீர் கல்யாணி, தாளம் ஆதி.

பல்லவி.

மாகீர்த்திமைவாய்ந்த மகாராஜன்—மெய்ஞ்ஞான
வாழுங்க போஜன்

அநுபல்லவி.

காகுதிசேர் சிவகங்கை வாசன்—துரைச்சிங்க
கருணை மிகும் நேசன்

தொகையறா.

மங்கள முழக்கவே செங்கோல் புனைந்துமுன்
மகுடாபிஷேக முற்றோன்
மீனாக்ஷிதவரும லாசபுரி விற்பனன்
மறையவர்களாசி பெற்றோன்

(பாட்டுத் தொடர்)

ஔவையார் வாக்கியத்தை மதித்தோன்
விவேக மாயுளத்தில் மதித்தோன்
செவ்வையாய் ஆஸ்டல் தர்மமமைத்தோன்
என்றென்றும் அரியபேறு பதித்தோன்.

(தொகையறா)

அன்னசத்திரத்திலே பன்னலம் பாராட்டி
அமுதளித்திட்ட தீரன்
அவதாரபுருடனென் றுலகோர்புகழ்ந்திட்ட
அற்புததயாள வீரன்.

பாட்டுத்தொடர்.

சிங்கார வாகனமே லோலன்—கே. வி. யார
செப்பும்பத சீலன்
மங்காதயோகபீரு மூலன்கெம்பீர
மகிபனனு கூலன். (மாகஷி)

(சரிசரி சாமுத்ரிகா லட்சணம் என்றமெட்டு.)

இராகம் தேசிகம். தாளம் ஆதி.

பல்லவி.

மகிமையே மகிமையே மகராஜகத்
துரைச்சிங் கேந்தரன் (மகி)

அநுபல்லவி.

மனுநீதியி லனுபூதிய னெனுமாதிப தனபூபதி (ம)

சரணங்கள்.

அகிலபுவனபோகபுண்ய அம்சர்மயோகமே
அரியசொற்ப்ரசங்கதுங்க அற்புதச்சம்பாகமே
அறிவிவேகமே தருமதியமோகமே
தருமனுகூலரற் குணசீலவிற் பனமூலசற்ஜனலோலனின் (ம)

விருதிலனுமக்கெருடத்துவஜமேன்மையின்பிரதாபமே
வீரசம்பவந்தவழ்வி சேடகாலட்சேபமே
மிகுஞ்சுபாபமே யெழில் புகுஞ்ச லாபமே—பல
விரதாதிகள் புரிமாதவ வாதாதிப கருணாகரன். (ம)

கமழுஞ்சுமுக ரம்யகீத கானமலியும் பாக்யமே
கருதிடுக்கே வீரபத்ரன் காதலின்ப வாக்யமே
கனசிலாக்யமே யின ஜனவைபோக்யமே—சுப
காமங்கள தாகங்கண சிவகங்கையி லமரிங்கித (ம)

(கோல்லாமற் கோல்லுகிறான் என்ற மெட்டு.)

இராகம் பியாகு. தாளம் ரூபகம்.

பல்லவி.

சிங்காரமான துரைச் சிங்கேந்த்ர நாம லோலன் (சி)

அநுபல்லவி.

சேஷமபிக் குடையோன் சிவகங்கை
மாமகத்து வமேதகுங்குண
சீலமகாராஜ சம்பனனே
திவ்யானந்தனே தாலமதிலே நிரஞ்சனனே (சி)

சரணங்கள்.

கண்டோர் வணங்கு மின்பன் திண்டோளிணங்குமன்பன்
காருண்ய மிகுந்தோன்—தேவ
லாவண்ய மமைந்தோன்—உயர்

கானமுத்தமிழ் ஞானதத்துவ
மோனவிர்த்தியி லானவுத்தம
ஆவியமெல்லா முணர்ந்தவனே—கே. வீரபத்ரன்
பாவினிமையே நிறைந்தவனே (ஆ)

(சுதேச முகம்மதலி என்ற மெட்டு.)

இராகம், இ-தோடி. தாளம் ஆதி.

பல்லவி.

ஜனுஜு கூலதுங்கம் சார்ந்திடுந் துரைச்சிங்கம் (ஜ)

அநுபல்லவி.

மனோஜ்ஞசீலத் துங்கம்
வாய்ந்திடும் கல்விப்ர சங்கம் (ஜ)

சரணங்கள்.

குணுஜு கூல கண்யன்
குன்று திலங்கும் புண்யன்
கோமான் விசேட தன்யன்
சோமாதிபன் லாவண்யன் (ஜ)

தொகையறா.

தெய்வீக மகிமைசேர் சிவகங்கை யம்பதித்
திவ்யாவ தாரவேந்தன்
செந்தமிழ் மகோதயக் கே. வீரபத்ரன் புகல்
சின்மயக் கீதசாந்தன்.

(பாட்டுத் தொடர்)

உடையணவேள் தனயன்
ஒழுக்கமிகுஞ் சொல்நயன்
ஓங்கும் வைபோக யோக்யன்
உண்மைசேர் விநேதமயன் (ஜ)

(அடடாஇவளலங்கிர் தவடி வுடையாள் என்றமெட்டு.)

பல்லவி

திருமா தமர்புயபலத் துரைச்சிங்கமே
சிவகங்கையாளும் (திரு

அநுபல்லவி

தருமா தமி ழறிஞர்கள்மொழிபத
சாகரகருணைகாகுண சேகரசுக போககண்ய (திரு)

சரணங்கள்.

மருமலரணிபிர பலவிக சிதமுறு
மடந்தையரோவிய முகந்த சிங்காரனே
சுகுல கதிபதி மாபிலுதாரனே
சுந்தரகுண தந்திரபுவி யிந்திரனென வந்துதவிய (திரு)

உண்மைக்கென்று முயிர்நிலையானவன்
பண்மைத்தொண்டின் பயனுணர்வானவன்
நன்மைக்கின்றும் நவமணியானவன்
தன்மைக்குண்டுந் தவமய மானவன் (திரு)

சாருமுத்தமிழ் வீரபத்திரன்
சீர்ப தத்திலு தார மித்திரன்

(செந்திற்குமாரவேளுண்டு என்றமெட்டு.)

இராகம், சுருட்டி. தாளம், ஆதி.

பல்லவி.

ஜீவகாருண்ய சம்பன்னன் துரைச்சிங்கேந்த்ரன் (ஜீவ)

அனுபல்லவி.

(1) திருவருள் தங்கிய பிரபுவிளங்கிய (ஜீ)

(2) சிறப்பமைந்திடுந் திடபுயபலமுயர்
பிறப்பமைந்திடும் பெருமையினன்பெயர் (ஜீ)

(3) திகழுற் புதநற் கிரியைக் குரியோன்
புகழுற் பவசற் குணசொற் பெரியோன் (ஜீ)

(4) திக்திக்குஞ்சுவை யொத்தத்தொனிமயன்
சித்தத்திற்பரி சுத்தத்தமணியன் (ஜீ)

(5) சேவிக்கத்தகுஞ் சிவகங்கைவாசன்
பூவிற்குள் மிகும் புனிதவிலாசன் (ஜீ)

சரணம்

சங்கத்தமிழ் விவேகன் சந்தானபோக யோகன்
துங்கச்சி ரேட்டவாகன் சொர்ணாபிஷேக தேகன்
சகமுறுமற்புத சோபிதகீதன்
சிகிபுரி வீரபத்திரன்பகர் போதன் (ஜீ)

(வேலோனே சமையமிதருள்வ்டி என்ற மெட்டு.)

பல்லவி.

மகாராஜன் வாதுங்க துரைச்சிங்க (ம)

அநுபல்லவி.

(1) வாகைமாலையணி யோகவான் சுமுக (ம)

(2) மதியிற் சிறந்த பதியிற் பிறந்த (ம)

(3) மதனத்திருவுரு வதனத்தினிலுறு (ம)

(4) மகிதலத்தினிற் ப்ரசித்த மித்ருலத்தினிற் செனித்த ()

(5) மங்கள சம்ப்ராம புங்கவ கங்கண
சங்க்ரக சம்பவ (ம)

சரணங்கள்.

தருமலங் கிர்தமப தமனிய தேகன்
தமிழமுதருந்திய சற்குணவாகன்
பகைவர்கள் வணங்கிடும் பண்பமையோகன்
பஞ்ச லக்ஷ ணங்குலக்கும்
செஞ்சொ லின்ப மேயிலக்கு (ம)

கடல்புடை சூழுல கினிலுயர் கன்னியன்
கருணையிலமுகிய பரம்பரைப் புண்ணியன்
உடையணவேளுள மூகந்திடுங் கண்ணியன்
ஒவியத்திணைந்தபுங்கன் கே. வியார்பதப்ர சங்கன் (ம)

(வெள்ளிமலை யோத்தபல மேடை என்ற மெட்டு.)

கண்ணிகள்.

(1) செந்தமிழ்ம ணாகமமு மார்பன்—துரைச்
சிங்கமகி பன்சமுக நேர்பன்—புகழ்

சேருஞ்சிவ கங்கைநக ராளுந்தவ துங்ககுண
சீலன் அநு கூலன் (செ)

(2) சந்ததமுஞ் செந்திருவி லாசன்—சுக
சம்பவமு கந்திடுமுல் லாசன்—யோக
சாதகம்பு ரிந்துஞான சாதகம்பெறவிரும்புந்
தக்கோன் மதி மிக்கோன் (செ)

(3) எஸ்ட்டேட் நிர்வா கத்திலமரின்பன்—ஐ. சி.
பெல்லாணர்ந்த தம்புதுரைக் கன்பன்—செங்கோ
லேந்துமனு நீதிமுறை சார்ந்தொழுகு மான்மியசித்
தாந்தன் எழில் வேந்தன் (செ)

(4) அந்தரங்க யோசனைக்கு கந்தோன்—பி. ஏ.
யார்த்திடும்பி லிப்ஸனுந்த குந்தோன்—றீன
யற்புதமு றப்பாவேட்செகரிட்டெரியென்றேயமைத்த
சிலாக்யன் தரும் பேரக்யன் (செ)

(5) உண்மையி லரிச்சந்த்ரனுக் குயர்ந்தோன்—உபி
ரோவியமெ னப்பெயர்சி றந்தோன்—தர்ம
மோங்குகர்னன் பின்னுதித்த பாங்குளானெ னத்திகழு
தாரன் அவதாரன் (செ)

(6) ஆங்கிலை சாட்சியி லபிமானி—கே.வீ.
யார்பகர்ப் பதத்தில்கற்கி யானி—புள
காங்கிதசொ ரூபகலங் தேங்கியகிர் பாணந்தவி
சேடன் பொற்பீடன் (செ)

## 24 சிவகங்கை மகாராஜா துரைச்சிங்கம் அவர்கள்

(புள்ளிக்கலாப மயில்வாகன் என்றமெட்டு.)

(1) கண்க ளின்பந்தவழுங் காக்ஷி—அயன்
கைத்திறம் பொருந்துஞ் சாக்ஷி—சிவ
கங்கையா ளுந்துரைச் சிங்கமன் னர
சாக்ஷி பெருமாக்ஷி (கண்)

(2) பெண்கள்ம டலெழுதும் வாகன்—கல்விப்
பெருமையார்ந் திடும மோகன்—வித்வ
பீட சங்க்ரகவி சேட சம்ப்ரமவி
வேகன் பரிபாகன் (கண்)

(3) அள்ளிக்கொ டுக்குங்கொடை யாளன்—அன்பர்க்
கருள்த ரத்த குந்தயாளன்—உல
காபி மானமிகுஞ் சோபி தங்கமழ்கு
ணாளன் அறிவாளன் (கண்)

(4) உள்ளத்தி னிற்களங்க மற்றோன்—மறை
யோதி நீதிபல கற்றோன்—புக
ழோங்கு மிங்கிதநற் பாங்கு ளானுயர்வு
பெற்றோன் எழி லுற்றோன் (கண்)

(5) விண்ணிறை வர்க்கதிக பாந்தன்—தமிழ்
வீரபத் திரன்பத சாந்தன்—துதி
மேவும் ராஜேஸ்வரி தேவியைப் பணிசித்
தாந்தன் நவில் வேந்தன் (கண்)

(இலங்கு செம்போன் என்ற மெட்டு.)

இராகம், செஞ்சுருட்டி. தாளம், ஆதி.

## பல்லவி.

நலந்ததும்பும ஜோதயசம்ப்ரம
ராஜேந்த்ர னென்நல கோர்புகழ்
நாமவிசேடத் தங்கமே துரைச்சிங்கமே
நாமணி சேடத் தங்கமே.

## அநுபல்லவித் தொடர்.

(1) நற்றமி ழூற்றுள முற்றம கத்துவ (ரா)
(2) நதிமதி யணிபசு பதியருள் நிதியெனும் (ரா)
(3) நத்தியபு லவர்சங்கை மூற்றுந்தவிர் சிவகங்கை (ரா)
(4) நகைத்த முகத்தின் விமரிசை
மிகுந்த சுகத்தி னுயர்திசை (ரா)

## சரணம்.

குலந்த தும்பும ஜோகாவாகன்
[illegible]காதறப் புரியுபன் யாசனைபோகன்
மலரார்ந்தவள்கிர்பை வாய்க்கிடுங் கே. வியார்
வழுத்திடும்பதம்பரி மளித்திடும்யோகன்
மங்களந்தங்கும் மோகன்—வித்யாவிவேகன்
மங்களந்தங்கும் மோகன் (நலந்)

# 26 சிவகங்கை மகாராஜா துரைச்சிங்கம் அவர்கள்

(மதீனமே மோரா சையா என்ற மெட்டு.)

இராகம், அமீர்கலியாணி. தாளம், ரூபகம்.

பல்லவி.

சோபிதகுணவாராஜ துரைச்சிங்கமே ராஜ
துரைச்சிங்கமே (சோ)

அநுபல்லவி.

பூபாலர்போற்றும் புவிக்கிதஞ்சாற்றும் (சோ)

தொகையறு.

மாபாரதத்தினுயர் மகிமைசேர் சிவகங்கை
மனுநெறி வழாத திருவே திருவே ஷி
மருமலர் செறிந்திட்ட கருணைசரக்குமண
மகிபசிங் காரவுருவே உருவே ஷி.

பாட்டுத் தொடர்.

மந்த்ரபுயாசலத் தந்த்ர விவேகன்
இந்த்ர குலாதிப ஸிங்கித போகன்
வாசைமா லைப்ராக் யாதன்
யூகன் கே. வீ. யார் கீதன் (சோ)

(பரப்பிர்மவேலா என்றமெட்டு.)

பல்லவி.

துரைச்சிங்கநேர்ப்ர துயபார்பா (து)

அநுபல்லவி.

(1) சுடர்கிர் திடுமணி முடிதரும் முடியணி (ஜ)
(2) துங்கமி கும்பீர சங்க கங்கை மங்களபுங்க (ஜ)

சரணம்:

இஷ்டசித்தி ரகலோல சிஷ்டானுக்ரகமூல
தோற்றும் புண்ய சொரூபசீல (ஜ)

(ஷடி மகுடம்)

சுருல கதிபதி மாபுயர் நிதியே
சுவைமூலி யினிலனு பவமிகு மதியே
சூழ்ந்தி திங்கலே பார்ந்த பதியே (ஜ)

தொகையரு

சுகிர்தசம் பவமுத்து விஜயரெகு நாதநற்
சோபிதவி சேட கன்யன்
சுகமிகுங் கௌரிவல் லவவுடைய ஞானேந்த்ர
சுவீகார தநய புண்யன்
திருமலங் க்ரதவாக னென்றலகி லுவமான
சங்க்ரகவி சேட தன்யன்
சாற்றிடுங் கே. வீர. பத்ரனின் சங்கீத
சாகித்ய கிரரம்யன்.

(பாட்டுத் தொடர்)

தருவளர் காதல தன்மையின் போக்யன்
சமரசநிலையுணர் சத்குண சிலாக்யன்
சங்கைதீர்சிவ கங்கைப்பாக்யன் (ஜ)

## 28 சிவகங்கை மகாராஜா துரைச்சிங்கம் அவர்கள்

(மைக்கேந்தபேக்குருபான் என்றமெட்டு.)

இராகம், தேசிககமாஸ். தாளம், ஆதி.

பல்லவி

ஸ்ரீமான்கௌரிவல்லவ துரைச் சிங்கேந்திரனும் (ஸ்ரீ)

அநுபல்லவி

சின்மயானந்தப்ரகாச தன்மையே தகுஞ்சுதேச (ஸ்ரீ)

சரணம்.

தேசாபிமான கண்யன்
பாஷாபிமான புண்யன்
நேச தன்யன்
செகந்தினிலவ தாரன்
மகத்துவ குண தீரன்
மிகுத்த நல்லுப காரன்
சிறப்புடையோன் (சின்)

தொகையறு

ஜென்மசாபல்யமருள் சிவகங்கையம்பதிச்
செங்கோல் புனைந்த சீலன் சீலன் சீலன்
செம்மலெனு முடையனை தேந்திரன் புரிதவச்
செல்வசுகிகார பாலன் பாலன் பாலன்

சரணத்தொடர்.

முத்தமிழ் வித்தாந்த சங்கம்
தத்துவசித்தாந்த துங்கம்

பக்தர் தங்கம்
மூவுலக வி சேடன்
பாவினிர்மச் சங் கோடன்
கே. வி. யார்பத் பீடன் (சி)
முகிலனையான்

(கோடாங்கியின் குமாரனே என்ற மெட்டு.)
இராகம், செஞ்சுருட்டி. தாளம், ஆதி.

பல்லவி.

ஸ்ரீமானெனும்பே ரோங்கி டுந்துரைச்
சிங்க நாமசம் பவனே (ஸ்ரீ)

அனுபல்லவி.

துரைச் சிங்க நாமசம் பவனே
சகத்தினிலுயர் தனிகரத் தின்மெனும் புனித (ஸ்ரீ)

சரணம்.

கோமானெனும்பூ பதியே—அனு
கூல குணமிகுநன் மதியே—தினங்
குவிபுன்னைச் சிவகங்கைப்
புவியின் கண் ணியனே (ஸ்ரீ)

தொகையறா.

தமிழினிமையார்ந்தவா அமுத மொழி சார்ந்தவா
தமணியசுசீல சுமுகா
சமரசமனேதரும விமரிசையிலமைதியுறுஞ்
சமைய நெறிவளர் சாதகா

பாட்டுத்தொடர்.

தாசனுங் கேவி. யார். தேசுறுக்கித (ஸ்ரீ)

# சிவகங்கை மகாராஜா துரைச்சிங்கம் அவர்கள்

(சூரகுலசம்மாரா என்ற மெட்டு)

இராகம் செஞ்சுருட்டி. தாளம் ஆதி.

பல்லவி.

தீனரட்சகசீலா—துரைச்
சிங்க நாமவிசாலா. (தீ)

அநுபல்லவி.

திருவே தருவே லோலா (தீ)

சரணங்கள்.

(1) சிவகங்கைப் பதிசெழித் திடும்பரிபாலா
ஜெயமே வியமா மூலா (தீ)

(2) மகபதிகுல தவமணியெனும்நிதியே
மணமோ கணமா மதியே (தீ)

(3) தமிழ்மணங் கமழ்ந்திடுந் தமனியமார்பா
தன்யா புண்யா லேர்பா (தீ)

(4) ஆங்கிலக் கவர்ன்மெண்டின் அரசகிஸ்வாசி
அறியார் வறியார் நேசி (தீ)

(5) பூவினிற் கே. வி. யார் போற்றுஞ்சங்கீதன்
புகழும் மகிழும் போதன் (தீ)

(மயிலக்கண்ணு என்ற மெட்டு)

இராகம், இந்துஸ்தான் தோடி. தாளம், ஆதி.

பல்லவி.

கருணைக்கண்ணு கனசம்பன்னு
கானமயிலே விற்பன்னு (கரு)

அநுபல்லவி.

தருணகுணானந்தனே கிருபாசகானந்தனே
சங்கந்தங்கும்பிர சங்கப்பொங்குஞ்சிவ
கங்கைத்தங்கத்துரைச் சிங்கத்துங்கமெனுங் (கரு)

சரணங்கள்.

(1) திருவளர்புயாசலனே தீனரக்ஷகாவலனே
சிரித்துப்புரத்தை யெரித்துக்கரித்தோ
லுரித்துத்தரித்தோ னுருத்திற்குகந்த (கரு)

(2) தானவிர்த்திக்காதானே ஞானவிர்த்திச்சோதானே
தலத்திற்சிறந்த பலத்தில்மிகுந்த
நலத்திலுயர்ந்த குலத்திற்பிறந்த (கரு)

(3) பாவலர்க்கருள்தியாகா கே. வி. யார் பதப்ரவாகா
பருவமமைந்த வுருவந்திமிர்ந்த
பெருமைநிறைந்த அருமைசெறிந்த (கரு)

(திராவிடருமாரியருங் கூடி என்ற மெட்டு.)

இந்துஸ்தான் பியாக். தாளம், ஆதி.

பல்லவி.

பூமகளும் பாமகளுங்கூடிவாழும்—பக்தி
பூணுமன்பர்கோஷ்டி யெந்நாளுஞ்—சூழும்
க்ஷேமமிகுஞ் சிவகங்கை தன்னையாளுந்துரைச்
சிங்கமன்னன் சேவைபெறத் துன்பந்தாழும் ஞானத்

அநுபல்லவி.

திருவே தங்கு மகான்பிய மாக்ஷி.
உருவே பொங்கு முயர்ந்தகண் காக்ஷி

சரணம்.

சிச்சே ருங்கே வியார்
கருமா திகங்கள் ஜோர்
ஜெயசோபன நயமேயுறுஞ்
ஜேஜெ ஜே யெனவ் (பூமகளு

(ஆனந்த மானந்த மானந்தமே என்ற மெட்டு.)

இந்துஸ்தானி தோடி. தாளம், ஆதி.

பல்லவி.

சோபனஞ் சோபனஞ் சோபனமே—சுப
சோபனஞ் சோபனஞ் சோபனமே. (சோ

அநுபல்லவி.

அங்கயிரு மிங்கிதமே
தங்கிடும லங்கிர்தமே. (சோ

சரணங்கள்.

(1) பூபதியாந் துரைச் சிங்கராஜேந்திரன்
பூலுங்கிர்பாகர நேசதுரந்தரன்
பாபமகற்றும்வி சேடநிரந்தரன்
பண்ணிய புண்ணிய
மெண்ணிய கண்ணியன் (சோ)

தொகையறா

(2) தென்னிந்திய நலவுரிமைக் க[illegible]ட்டுறவு ளோரணிய
சேவைபுரி நற்றய[illegible]ன
சி[illegible]ங்கை யம்பதிக் கரசனு யவதாரஞ்
செய்திட்ட தலைமையாளன்

சரணத்தொடர்.

செங்கோ லென்றென் றுஞ் செழிக்கும்பிர காசன்
செப்புங் கே. வீரபத்ரன்பதவாசன்
மங்கள மெங்கு முழங்குமுல் லாசன்
மதுரிதமுத் தமிழமுதத்
தினையுதவத் திருவருளால்

முற்றிற்று.